1975 அக்டோபர் 30]

அப்படியே இருந்துகொண்டிருப்பதால் அதைத் தனியாகப் பரிசீலனை செய்து அதை விரைவாக முடித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, நெட்டுக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல அரசுக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்திருக்கிறார்கள். தற்போதுள்ள வறுமை காரணமாக 61,600 ரூபாய் செலுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லையென்றும், இந்தத் தொகையையும் அரசு மேற்கொண்டு கொடுத்துவிட்டு பிறகு இந்தச் சங்கத்தின் மூலமாகத் திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். அது நிதித் துறைக்கு அனுப்பப்பட்டு அரசாங்கம் யோசித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர், கைவினைப் பொருள் விற்பனைக்கூடம்.

*144 **வினா திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு கதர்-கிராம வாரியத்தால் நடத்தப்படும் 'காதி கிராப்ட்'களின் 1973-74 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ரூபாய் 440.91 இலட்சங்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ்நாடு கதர்-கிராம வாரியத்தால் நடத்தப்படும் "காதி கிராப்ட்"-ல் மொத்த விற்பனையை அதிகரிக்க அரசு மேற்கொண்டு வரும் சிறப்பான நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அரசாங்கத் துறைகளில் கதர்த் துணிகள் வாங்குவது இடைக் காலத்தில் நிறுத்தப்பட்டது. அதுமட்டுமன்றி கதர்த் துணிகளை வாங்க 'செகண்ட் அட்வான்ஸ்' வழங்குவது அரசு ஊழியர் களுக்கு நிறுத்தப்பட்டது. கதர் விற்பனை அதனால்தான்

[திரு. மு. கண்ணப்பன்] [1975 அக்டோபர் 30

நடைப்பட்டது. ஆனால் அரசு சமீபத்திய ஆணையில் அரசு அலுவலகங்களுக்குத் தேவைப்படும் துணிகளை தமிழ்நாடு கதர் மற்றும் கிராம வாரியத்தினிடமிருந்து வாங்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. இப்படி அரசே வாங்க வேண்டுமென்று கூறியிருப்பதால் எதிர்காலத்திலே விற்பனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் கதர் ஆடைகளிலே பழுதுபட்டவைகளெல்லாம் சென்னை நகரம் ஒன்றில்தான் விற்பனையாகிறது. அம்மாதிரி விற்பனை செண்டர்களை முக்கியமான நகரங்களான மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கும் ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனை சென்ற கதர் வாரியக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு சேலம், கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களிலேயும், எங்கெங்கு தேவைப் படுகிறதோ அங்கங்கு அனுப்பி அந்தத் துணிகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know the value of the unsold stock at the end of the official year?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எந்த வருஷத்திலே கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: 1973-74-க்கு.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, 1973--74 ஆம் ஆண்டுக் கணக்கு இன்னும் எடுக்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, காதி கிராப்டிலே குறைந்த விலைக்கு சேலைகளை விற்கும்பொழுது பல ஜவுளிக் கடைக்காரர்கள் மொத்தமாக வாங்கிக்கொண்டு சென்று திரும்பவும் அதே லாபத்திற்கு விற்கிறார்கள். ஆகவே, தனி நபர்களுக்கு இத்தனைக்கு மேல் கொடுப்பதில்லை என்று உச்ச வரம்பு வைக்க முடியுமா?

1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஜவுளிக் கடைக்காரர்களிடம் அவர்கள் ஏமாறுமல் இருக்க வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, கதர்த் துணி விற்பனையாகாமல் 1973-ஆம் ஆண்டில் எவ்வளவு ஸ்டாக் இருந்தது? அது சம்பந்தமாக ஏதாவது ரிபேட் கொடுத்து, தவணைப்படி செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா, சென்ற வருஷம்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இது காதி கிராப்ட் மூலமாகத்தான் எவ்வளவு என்று இருக்கிறது. அதற்குரிய பதில்தான் என்னிடத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் பனைவெல்லக் கூட்டுறவு சங்கம்.

*145 வின. திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திக்குளம் பனைமரத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக 25—2—1975-ல் புதிய பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது சம்பந்தமாக மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இந்த மனு தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத் தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டது.

(இ) சங்கத்தை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி தூத்துக்குடி பனைத்தொழில் தனி அலுவலரை, வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்க மையம், ஃபெடரேஷன் இப்பொழுது கலைக்கப்பட்டு விட்டது. அதனால் இம்மாதிரி அமைக்கப்பட்ட சங்கத்திற்கு நிதி உதவி